# ‘மெட்ரோ’ நிலையத்தில் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி

சென்னை, டிச. 8–

ஆலந்துார் மெட்ரோ ரயில் நிலையத்தில், ‘கொரோனா’ தடுப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி, நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – சென்னை எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் மெட்ரோ நிலையம் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப் பட்டு வருகிறது.

இப்பயணியருக்கு, கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இத்துடன், நிலையங் களில், பயணியருக்கு கொரோனா தடுப்பு தொடர் பான விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள், நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வரிசையில், ஆலந் துார் மெட்ரோ ரயில் நிலை யத்தில், நேற்று முன்தினம் விழிப்புணர்வு, கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

‘நிமிர்வு’ கலையகம் சார்பில், பறையாட்டம் வாயிலாக, விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்பட்டது.




ஆலந்துார் மெட்ரோ ரயில் நிலையத்தில், பயணியருக்கு கொரோனா விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ‘நிமிர்வு’ கலையகம் சார்பில் பறையாட்டம் நிகழ்ச்சி நடந்தது.